தினமணி

**எண்ணெய், வெல்லம், பூண்டு விலை கிடுகிடு உயர்வு**

பா. ராஜவேல்
First Published : 13 Dec 2010 04:09:49 AM IST

சென்னை, டிச. 12: சமையல் எண்ணெய், வெல்லம், பூண்டு உள்ளிட்ட பொருள்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

பொங்கலுக்குப் பிறகு விலைகள் ஓரளவு குறைய வாய்ப்பு உள்ளதாக தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி. சொரூபன் தெரிவித்தார்.

கடந்த மாதம் கிலோ 48-க்கு விற்பனையான பாமாயில் இப்போது கிலோ 60-க்கு விற்பனையாகிறது. அமெரிக்க டாலரின் மதிப்பு ஏற்ற, இறக்கத்துடன் இருந்து வருவதால் சர்வதேசச் சந்தையில் பாமாயிலின் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருந்து வருகிறது. இதனால் இந்திய சந்தையில் பாமாயிலுக்கு தினம் ஒரு விலை நிர்ணயம் செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

இதே போல் கடந்த மாதம் கிலோ 65-க்கு விற்பனையான சூரியகாந்தி எண்ணெய் இப்போது கிலோ 75-க்கு விற்பனையாகிறது. கடந்த மாதம் கிலோ 110-க்கு விற்பனையான அக்மார்க் நல்லெண்ணெய் இப்போது கிலோ 120-க்கும், பிரபல கம்பெனிகளின் பாக்கெட் நல்லெண்ணெய் கிலோ 140 வரையிலும் விற்பனையாகிறது. இரண்டாம் ரக நல்லெண்ணெய் கிலோ 60-ல் இருந்து 80-ஆக உயர்ந்துள்ளது.

அனைத்து எண்ணெய் வகைகளும் உயர்ந்துள்ள நிலையில் கடலை எண்ணெய் மட்டும் விலை சற்று குறைந்துள்ளது. முதல் ரக கடலை எண்ணெய் கடந்த மாதம் கிலோ 100 வரை விற்பனை செய்யப்பட்டது. இப்போது கிலோ 90-க்கு விற்பனையாகிறது. இரண்டாம் ரக கடலை எண்ணெய் கிலோ 90-ல் இருந்து 83-ஆகக் குறைந்துள்ளது.

வெல்லம் விலை உயர்வு (அடைப்புக்குள் கடந்த மாத விலை): முதல் ரக வெல்லம் கிலோ 50 ( 45), 2-ம் ரக வெல்லம் கிலோ 38 ( 30), அச்சு வெல்லம் கிலோ 55 ( 45) என விற்பனையாகிறது. இந்த விலைகள் மேலும் உயரும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். பொங்கலுக்குப் பிறகு இதன் விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் விளைந்துள்ள ஆலைக் கரும்புகள் இன்னும் அறுவடையாகாமல் உள்ளதாலும் கடந்த மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் ஆலைகளுக்கான ஒதுக்கீட்டை 2.5 லட்சம் டன் வரை மத்திய அரசு குறைத்துள்ளதாலும் சர்க்கரை விலை உயர்ந்து வருகிறது. சர்க்கரை கிலோ 34 ( 28), முந்திரி கிலோ 500 ( 400), 2-ம் ரக முந்திரி கிலோ 400 ( 300), ஏலம் 1,200 ( 800).

பூண்டு விலை தொடர்ந்து உயர்வு: கடந்த சில மாதங்களாக பூண்டு விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்தியாவில் விளையும் பூண்டை, சில முக்கிய அரசியல் பிரமுகர்கள் கூட்டு சேர்ந்து மொத்தமாக கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதால் இதன் விலையைக் கட்டுபடுத்த முடியவில்லை என்று வியாபாரிகள் குற்றம் சாட்டுகின்றனர். ஒரு கிலோ முதல் ரக பூண்டு 250 ( 180), 2-ம் ரக பூண்டு 220 ( 160), மலைப்பூண்டு கிலோ 250 ( 240).

புளி விலையும் உயர்வு: இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் அதிக அளவில் புளி விளைச்சல் உள்ளது. கடந்த சில மாதங்களாக அங்கு கனமழை பெய்ததால், புளி அறுவடையில் காலதாமதம் நிலவுகிறது. இதனால் புளி விலை இப்போது உயர்ந்து வருகிறது. இது ஜனவரிக்கு பிறகு குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். ஒரு கிலோ முதல் ரக புளி 110 ( 75), 2-ம் ரக புளி 90 ( 60), தோசை புளி கிலோ 80 ( 60).

மிளகாய், பருப்பு வகைகள் விலை குறைவு: கடந்த ஆண்டுகளில் உச்சத்தில் இருந்த பருப்பு வகைகளில் விலை இப்போது கட்டுக்குள் உள்ளது. கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில்தான் துவரை, பாசி, உளுந்து உள்ளிட்ட பயறு வகைகள் அதிக அளவில் விளைவிக்கப்படுவது வழக்கம்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட விலை உயர்வால் இந்த ஆண்டு குஜராத், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் அதிக அளவில் விளைவிக்கப்பட்டுள்ளது. மேலும் மியான்மர், தென் அமெரிக்கா, கனடா, கென்யா ஆகிய நாடுகளில் இருந்தும் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இதனால் பருப்பு வகைகளின் விலைகள் குறைந்து வருகிறது.

முதல் ரக துவரம் பருப்பு கிலோ 58 ( 63), கென்யா துவரம் பருப்பு கிலோ 48 ( 60), தென்அமெரிக்கா, கனடா வகை துவரம் பருப்பு கிலோ 35 ( 45), முதல் ரக உளுத்தம் பருப்பு கிலோ 64 ( 70), மியான்மர் உளுத்தம் பருப்பு கிலோ 60 ( 65), முதல் ரக பாசிப் பருப்பு கிலோ 65 ( 68), 2-ம் ரக பாசிப்பருப்பு கிலோ 60 ( 65).

இதே போல் தமிழகத்தில் பரமக்குடி, விளாத்திக்குளம், சங்கரன்கோவில், சாத்தூர், ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மிளகாய் நல்ல விளைச்சல் கண்டுள்ளதால் இதன் விலைகளும் குறைந்து வருகிறது. பதப்படுத்தப்பட்ட மிளகாய் 90 ( 120), 2-ம் ரக மிளகாய் 70 ( 100), கடந்த ஆண்டு இருப்பு மிளகாய் கிலோ 50.

**தென்னை நலவாரியத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 13 Dec 2010 08:23:45 AM IST

நாமக்கல், டிச.12: தென்னை விவசாயிகள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக நாமக்கல் ஆட்சியர் சோ. மதுமதி தெரிவித்தார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் நலவாரியத்தில் தென்னை சாகுபடியாளர்களை உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு விண்ணப்பப் படிவம் தோட்டக் கலைத் துறை மூலம் விநியோகிக்கப்பட உள்ளது. இந்த நலவாரியத்தில் குறைந்தபட்சம் 50 தென்னை மரங்கள் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் மட்டும் உறுப்பினராக சேர முடியும்.

÷எனவே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தென்னை சாகுபடியாளர்கள், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக் கலைத் துறை அலுவலர்களை சந்தித்து உறுப்பினர் படிவத்தை இலவசமாகப் பெற்று பயனடையலாம். உறுப்பினர் சேர்க்கையின்போது விண்ணப்பதாரரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை விண்ணப்பப் படிவத்தில் ஒட்ட வேண்டும்.

÷மற்றொரு புகைப்படத்தின் பின்னால் விண்ணப்பத்தாரரின் பெயர் எழுதி விண்ணப்பத்துடன் இணைத்திட வேண்டும். ஒரு விவசாயிக்கு ஒரு விண்ணப்பப் படிவம் என்ற விகிதத்தில்தான் படிவம் வழங்கப்படுகிறது.

÷மேலும், விவரங்களுக்கு வட்டார தோட்டக் கலைத் துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கருவாட்டை காயவைத்து பதப்படுத்தும் பணியில் மீனவர்கள்**

First Published : 13 Dec 2010 07:31:22 AM IST

காரைக்கால், டிச. 12: மழையாலும், கடல் நீர் புகுந்ததாலும் பாதிக்கப்பட்ட பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவாட்டை வெயிலில் காயவைத்து பதப்படுத்தும் பணியில் காரைக்கால் மீனவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

÷காரைக்கால் பகுதியில் உணவுக்குப் பயன்படுத்தப்படாத சில மீன்களும், வலையில் அதிகமாக சிக்கக்கூடிய காரை, பொருவா உள்ளிட்ட சில வகை சிறிய மீன்களும் கருவாடாக மாற்றப்பட்டு, தமிழகத்தில் நாமக்கல், கேரள மாநிலத்தின் சில பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

÷இந்நிலையில், அண்மையில் பெய்த மழையாலும், கடல் சீற்றத்தால் கிராமப் பகுதிக்குள் தண்ணீர் வந்ததாலும் கரையோரப் பகுதியில் உலர வைத்திருந்த கருவாடுகள் முற்றிலும் நனைந்து பாதிக்கப்பட்டன.

÷தற்போது மழை இல்லாததால், நனைந்த கருவாடுகளை காயவைத்து பதப்படுத்தும் பணியில் மீனவக் குடும்பத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

÷நல்ல கருவாடு ஒரு கிலோ ரூ. 10 என்று விற்கப்பட்ட நிலையில், தற்போது மழையால் பாதிக்கப்பட்ட கருவாடுகளை ரூ. 5-க்கும் குறைவாகவே விற்க நேரிடும்.

÷எனவே, காரைக்காலில் கருவாடு உற்பத்தி செய்யும் குடும்பத்தினருக்கு உரிய நிவாரண உதவிகளை புதுவை அரசு வழங்க வேண்டும் என இந்தப் பகுதி மீனவர்கள் வலியுறுத்தினர்.

**"மூங்கில் பயிரிட |8 ஆயிரம் மானியம்'**

First Published : 13 Dec 2010 09:02:14 AM IST

அரக்கோணம், டிச. 12: மூங்கில் வளர்க்க ஒவ்வொரு விவசாயிக்கும் | 8ஆயிரம் மானியம் வழங்கப்படும் என வேலூர் மாவட்ட தோட்டக் கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் துணை இயக்குநர் கே.எஸ். ராதாகிருஷ்ணன் கூறினார்.

அரக்கோணம் அடுத்த நகரிகுப்பத்தில் தேசிய மூங்கில் இயக்கம் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பயிற்சி முகாமில், அவர் பேசியது:

மூங்கில் வளர்க்க மத்திய அரசு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது. தற்போது மூங்கில்களுக்கு அதிக தேவை உள்ளது. எனவே, ஒவ்வொரு விவசாயிக்கும் மூங்கில் வளர்ப்பதற்காக ஒரு ஹெக்டேருக்கு முள் இல்லா மூங்கில் செடிகள் 400 வழங்கப்படுகிறது. இதற்காக முதல் வருடம் |4 ஆயிரமும், இரண்டாம் ஆண்டு செடிகள் 90 சதவீதம் பராமரிக்கப்படும் நிலையில் மேலும் |4 ஆயிரமும் மானியமும் வழங்கப்படுகிறது என்றார் ராதாகிருஷ்ணன்.

முகாமில் தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை உதவி இயக்குநர் ஐ.ஜெபக்குமாரி அனி, உதவி வேளாண் அலுவலர்கள் பு.ச.ஜீவானந்தம், ரா.வாசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பயிர் காப்பீடு: விவசாயிக்கு முழுப் பலன் தருமா?**

த.தேவராஜ்

First Published : 12 Dec 2010 12:00:00 AM IST



விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஏக்கருக்கு வழங்கும் பயிர்க் கடன் 10,500 என்று கணக்கிட்டு, அதன் அடிப்படையில் மட்டுமே பிரீமியம் வசூலிக்கப்படுகிறது. இதனால் இய

கடலூர், டிச. 11: மத்திய அரசின் தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் பயிர் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு முழுப் பலன் தருமா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இத்திட்டத்தில் நெல் பயிருக்கு (மகசூல் மதிப்பில்) 2 சதவீதம் பிரீமியமாக, விவசாயிகளிடம் காப்பீடு தொகை வசூலிக்கப்படுகிறது. இதில் 50 சதவீதத்தை பயிர்க்கடன் பெற்ற விசாயிகளுக்கும், 55 சதவீதத்தை கடன்பெறாத மற்றும் சிறு குறு விவசாயிகளுக்கும் மானியமாக மத்திய மாநில அரசுகள் வழங்குகின்றன.

இந்த ஆண்டு நெல்லுக்கு குறைந்தபட்ச மகசூல் மதிப்பாக ஏக்கருக்கு 13,024 என மதிப்பீடு செய்து பிரீமியத் தொகை, அரசு மானியம் போக, கடன் பெற்ற மற்றும் பெரிய விவசாயிகளுக்கு 130-ம் கடன்பெறாத மற்றும் சிறு குறு விவசாயிகளுக்கு 117-ம் வசூலிக்கப்படுகிறது.

2005-ம் ஆண்டு வரை கடலூர் மாவட்டத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே, பயிர் காப்பீடு செய்யப்பட்டது. 2005-ம் ஆண்டு காப்பீடு செய்த விசாயிகளுக்கு 2006-ல் அதிகபட்சம் ஏக்கருக்கு 2,500 கிடைத்தது. 2007-ம் ஆண்டு 1,088 விவசாயிகளுக்கு 11.83 லட்சம் இழப்பீடு கிடைத்தது. அதிகபட்ச இழப்பீடு 600. 2008-ம் ஆண்டு 32,376 விவசாயிகளுக்குக் கிடைத்த மொத்த இழப்பீடு 23.08 கோடி. அதிகபட்ச இழப்பீடு 6 ஆயிரம். 2009-ல் காப்பீடு செய்த விவசாயிகள் 39,139. இழப்பீடு பெற்றவர்கள் 12,505 பேர். கிடைத்த மொத்த தொகை 4.08 கோடி. விவசாயிக்குக் கிடைத்த அதிகபட்சத் தொகை 2,600. குறைந்தபட்சத் தொகை 51 மட்டுமே.

தற்போதைய நெல் வேளாண்மையில் உண்மையான மகசூல் மதிப்பு ஏக்கருக்கு சுமார் 25 ஆயிரம். விவசாயிகள் மகசூல் மதிப்பை உயர்த்தி கூடுதல் காப்பீடு செய்ய விரும்பினால், மகசூல் மதிப்பில் 8.9 சதவீதம் தொகையை பிரீமியமாகச் செலுத்த வேண்டும் என்கிறது வேளாண் காப்பீட்டு நிறுவனம்.

எனவே உண்மையான மகசூல் மதிப்புக்கு விவசாயிகள் காப்பீடு செய்ய விரும்பினால் கடன் பெற்ற விவசாயிகள் 507-ம் கடன்பெறாத விவசாயிகள் 456-ம் பிரீமியமாகச் செலுத்த வேண்டும். ஆனால் உண்மையான மகசூல் அடிப்படையில், பிரீமியத் தொகையை உயர்த்தி வழங்க விவசாயிகள் முன் வந்தாலும், வங்கிகள் ஏற்றுக் கொள்வது இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

ஆனால் உண்மையில், வங்கிகள் உயர்ந்தபட்ச உண்மையான மகசூல் மதிப்பு அடிப்படையிலும் பிரீமியம் வசூலிப்பது இல்லை, குறைந்தபட்ச மகசூல் மதிப்பு (இந்த ஆண்டு 13,024) அடிப்படையிலும் பிரீமியம் வசூலிப்பது இல்லை என்பது மற்றும் ஒரு பிரச்சினை.

விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஏக்கருக்கு வழங்கும் பயிர்க் கடன் 10,500 என்று கணக்கிட்டு, அதன் அடிப்படையில் மட்டுமே பிரீமியம் வசூலிக்கப்படுகிறது. இதனால் இயற்கை பேரிடர் காரணமாக, ஒரு விவசாயிக்கு ஏக்கருக்கு ஏற்படும் மகசூல் இழப்பு 25 ஆயிரம் என்று கணக்கிடாமல், கடன் பெற்ற தொகையான 10,500-ஐ மகசூல் மதிப்பாகக் கணக்கிட்டு, அதிலும் அதிகபட்ச இழப்பீடாக 66 சதவீதம் மட்டுமே (ஏக்கருக்கு சமார் 6,500) வழங்கப்படுகிறது.

இதனால்தான் பயிர் காப்பீட்டுத் திட்டதால் அதிக நன்மை இல்லை என்ற எண்ணம், விவசாயிகள் மனதில் வேரூன்றி இருக்கிறது. பொதுவாக ஒரு நபர் 2 லட்சத்துக்கு ஆயுள் காப்பீடு செய்திருந்து, அவர் இறக்க நேரிட்டால், அவரது குடும்பத்துக்கு 2 லட்சம் இழப்பீடு வழங்குவதுதான் உண்மையான காப்பீட்டுத் தத்துவம் ஆகும்.

ஆனால் வேளாண்மையில் மட்டும் ஒரு ஏக்கர் மகசூல் மதிப்பு 25 ஆயிரமாக இருக்கும்போது, மகசூல் மதிப்பு 13,024 என்று கணக்கிட்டு, அதிலும் அவர் பெற்ற கடன் தொகையான 10,500 ஐ மகசூல் மதிப்பாக எடுத்துக் கொண்டு, அதிலும் 66 சதவீதத்தை மட்டுமே இழப்பீடாக வழங்குவதால், மகசூலை முற்றிலும் இழந்து தவிக்கும் விவசாயிக்கு, எப்படி உண்மையான காப்பீடாக அமையும் என்று கேள்வி எழுப்புகிறார்கள் விவசாயிகள்.

இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் மட்டும் பயிர்க் காப்பீடு செய்யத் தகுதியுள்ள விவசாயிகள் (அனைத்து பயிர்களுக்கும்) எண்ணிக்கை 1.70 லட்சம் என்று அரசு மதிப்பீடு செய்து, அதற்குத் தேவையான பிரீமியத்துக்கான மானியத் தொகையையும், பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்துள்ளது தமிழக அரசு.

ஆனால் இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் அனைத்து பயிர்களுக்கும் காப்பீடு செய்தவர்களின் எண்ணிக்கை 44,405 என்று கூட்டுறவுத்துறை தெரிவிக்கிறது. இதில் கடன் பெறாத விவசாயிகளின் எண்ணிக்கை 289 (கடந்த ஆண்டு 6,629) ஆகும்.

**தனித்தனி கணக்கீடு தேவை**

மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், ""2005 வரை இழப்பை வட்டார அளவில் மதிப்பீடு செய்து காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. 2006 முதல் பிர்கா அளவில் ஆய்வு செய்யப்படுகிறது. இது போதாது, ஒவ்வொரு விவசாயியின் பயிரையும் ஆய்வுசெய்து, இழப்பீட்டுத் தொகை வழங்கக் கோரி வருகிறோம். வரும் ஆண்டில்

இதை கடலூர், நாமக்கல், சிவகங்கை மாவட்டங்களில் பரிட்சார்த்தமாக மேற்கொள்ள, ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு விவசாயிக்கும் உண்மையான மகசூல் மதிப்பில் பிரீமியத் தொகை வசூலித்து, இழப்பையும் தனித்தனியாகக் கணக்கிட்டு இழப்பீடு வழங்கினால் தான் விவசாயிகளுக்கு முழுமையான பயன் கிட்டும் என்றார்.

**பருத்தி: வயல்வெளி பயிற்சியில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 12 Dec 2010 11:36:03 AM IST

பெரம்பலூர், டிச. 11: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி வயல்களில் நடைபெறும் பயிற்சி முகாம்களில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வல்லுநர் சி.சங்கர்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பு:

மத்திய வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும், மும்பை பருத்தி வேளாண்மைத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிதியுதவியுடன் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைத் துறை சார்பில், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள நெற்குணம், தொண்டப்பாடி, வேப்பூர் வட்டத்தில் உள்ள ஓலப்பாடி, வயலப்பாடி மற்றும் அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில் உள்ள கீழவண்ணம் உள்ளிட்ட கிராமங்களில் வயல்வெளிப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதிகளில் 30 பருத்தி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட கிராமங்களில் வாரம் ஒருமுறை அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில், பருத்தி சாகுபடி முறைகள், மண் பரிசோதனை, ரகங்கள் தேர்வு செய்தல், ஒருங்கிணைந்த முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், செயல்பாட்டு முறைகள், வயல் சூழல் ஆய்வு, முதல்நிலை செயல் விளக்கம், நேரடி வயல்வெளி ஆய்வுகள் மூலம் விளக்கமும் அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சிகளில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு, வாரம் ஒருமுறை வேளாண் வல்லுநர்கள் மூலம் பயிற்சிகள் மட்டும் செயல்பாட்டு முறைகள் மூலம் விளக்கம் அளிப்பார்கள். மேலும், பூச்சிகள், நோய்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை விவசாயிகளே கண்டறிந்து, ஒருங்கிணைந்த முறையில் அதைக் கட்டுப்படுத்துவது குறித்து செயல்விளக்கம் மூலம் விளக்கவுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பருத்தி விவசாயிகள் இப்பயிற்சி முகாம்களில் பங்கேற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

**திருவண்ணாமலையில் பலத்த மழை**

First Published : 13 Dec 2010 09:05:46 AM IST

திருவண்ணாமலை, டிச.12: திருவண்ணாமலை நகரில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை விடிய விடிய பலத்த மழை பெய்ததால் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் நீர் புகுந்தது. இதனால் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் இரண்டு நாள்களுக்கு முன்பு இரவு முழுவதும் பலத்த மழை பெய்ததால் 10-க்கு மேற்பட்ட கிராமங்களில் ஏரிகள் நிரம்பி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் 3 பேர் இறந்தனர். மேலும் 20 ஆடுகள், 1,500 கோழிக்குஞ்சுகள் இறந்தன. இதனால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்தே பொதுமக்கள் மீளவில்லை.

இந்நிலையில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை பலத்த மழை பெய்தது. இதனால் மாந்தோப்பு பகுதியில் உள்ள 1, 3, 5-வது தெருக்களில் வீடுகளில் மழைநீர் புகுந்தது. மலையில் இருந்து வரும் நீர் செல்லும் வழியில் இருந்த ஓடை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதால் வீடுகளில் நீர் புகுந்து விட்டது எனக் கூறி அப்பகுதி மக்கள் வேலூர் சாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். கிழக்கு காவல்நிலைய இன்ஸ்பெக்டர் வெள்ளையன் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சு நடத்தினார். பின்னர் பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

பலத்த மழையால் புதுத்தெருவைச் சேர்ந்த லட்சுமி, மண்ணம்மாள், பவானி, புதுகார்கானாத் தெருவைச் சேர்ந்த ராஜா ஆகியோரின் வீடுகள் இடிந்தன.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரத்தின்படி பதிவான மழையளவு:

திருவண்ணாமலை 79.9 மி.மீ., வந்தவாசி-16, ஆரணி-27.8, செங்கம்-23, போளூர்-36, சாத்தனூர் அணை-5.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 120.5 அடி**

First Published : 12 Dec 2010 11:51:02 AM IST

தஞ்சாவூர், டிச. 11: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 120.5 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 6,678 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து வினாடிக்கு 6,021 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து காவிரியில் வினாடிக்கு 1,003 கன அடி, வெண்ணாற்றில் வினாடிக்கு 529 கன அடி, கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 2,513 கன அடி, கொள்ளிடத்தில் வினாடிக்கு 2,624 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 12 Dec 2010 11:35:27 AM IST

பெரம்பலூர், டிச. 11: மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேமுதிக வலியறுத்தியுள்ளது.

பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில், வேப்பூர் ஒன்றிய தேமுதிக நிர்வாகிகளின் ஆய்வுக்கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு அக்கட்சியின் ஒன்றியச் செயலர் ஜி. தர்மலிங்கம் தலைமை வகித்தார். மாவட்ட அவைத் தலைவர் மா. கணபதி, துணைச்செயலர் கே.எஸ். சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர் சி. நல்லமுத்து, தொழில் சங்கத்தலைவர் வி.சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மாவட்டச் செயலர் துரை. காமராஜ், தேமுதிக சார்பில் சேலத்தில் நடைபெற உள்ள மாநில மாநாடு குறித்து விளக்கிப் பேசினார்.

இதில், மழையால் பாதிக்கப்பட்ட மக்காசோளம், நெல், பருத்தி, மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள் உள்ளிட்ட விளைபொருள்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்க வேண்டும், மழையால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், வரகூ- கொளப்பாடி சாலையில் உள்ள ஆணைவாரி ஓடை தரைப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்த வேண்டும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2500 வழங்க வேண்டும், வெள்ளாறு மற்றும் சின்னாறு பாலப்பணிகளை துரிதப்படுத்த வேண்டும், சேலத்தில் நடைபெறும் மாநாட்டுக்கு, வேப்பூர் ஒன்றியத்தில் இருந்து 400-க்கும் மேற்பட்ட வாகனங்களில் செல்வது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், கட்சி நிர்வாகிகள் சி. மலர்மன்னன், ஏ.எம். கிருஷ்ணசாமி, எஸ். சுரேஷ், சி.எம். விஜய், எம். சதாசிவம், சி. பழனிவேல், பி. மனோகரன், சீதாபாலு, வி. செல்வம், எஸ். செந்தில், டி. செந்தில் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, ஒன்றிய துணைச்செயலர் சி.வேல்முருகன் வரவேற்றார். கிளைச்செயலர் அருணாசலம் நன்றி கூறினார்.

**ராசிபுரம் பகுதியில் மழை பெய்தும் நிரம்பாத ஏரிகள்!**

First Published : 13 Dec 2010 08:23:29 AM IST

ராசிபுரம், டிச. 12: நாமக்கல் மாவட்டத்தில் மழை பெய்தும் பெரும்பாலான ஏரிகள் நிரம்பாமல், வறண்டு காணப்படுகின்றன.

÷அண்மையில் வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. சென்னை மற்றும் தென் மாவட்டங்களின் பல்வேறு இடங்களில் இந்த தொடர் மழை, பெரும் சேதத்தையும் ஏற்படுத்தியது.

÷நாமக்கல் மாவட்டத்தில், குறிப்பாக ராசிபுரம் பகுதியில் குறைந்த அளவு மழைதான் பெய்தது. இப்பகுதியில் உள்ள பெரிய ஏரிகளான ராசிபுரம், பட்டணம், அலவாய்பட்டி, பொன்குறிச்சி ஏரிகள் நீர்வரத்து இன்றி வறண்டு காணப்படுகின்றன.

÷டிசம்பர் மாதத்தில் பருவமழையால் இப்பகுதி ஏரி, குளங்கள் நிரம்பி விவசாயத்திற்கு பயன் தருவது வழக்கம். இந்த ஆண்டு ராசிபுரம் ஏரியில் நீர் வரத்து தடைப்பட்டுள்ளதால், வழக்கமாக வரும் தண்ணீர் கூட வரவில்லை.

÷போதமலை, அலவாய்மலை பகுதிகளில் இருந்து மழை நீர் வரும் பாதையில் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளதால், நீர் வரத்து தடைபட்டுள்ளது. இதனால் ராசிபுரம் ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, கோடை காலங்களில் நீரின்றி விவசாயம் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

÷இதை தடுக்க ஏரிக்கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

தினமலர்

**பண்ணைசாரா கடனை திருப்பி செலுத்தும் அவகாசம் 2011ம் ஆண்டு வரை நீட்டிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:21 IST

நாமக்கல்: "பண்ணைசாரா  கடனை திருப்பி செலுத்தி வட்டிக் கடன் பெறுவதற்கான கால அவகாசம், 2011ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது' என, கலெக்டர் மதுமதி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளால் பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்பட்டு 2007ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் 2010ம் ஆண்டு மார்ச் மாதம் வரை காலநீடிப்பு செய்யப்பட்டது. தற்போது பண்ணை சாராக் கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வு திட்டத்தின் நடைமுறைக் காலம் 2011ம் ஆண்டு

டிசம்பர் மாதம் 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பண்ணைசாராக் கடன்களுக்கு ஏற்கனவே 25 சதவீதம் செலுத்தியவர்கள் மீதம் செலுத்த வேண்டிய தொகையை ஒரே தவணையில் அல்லது அதிகபட்சமாக நான்கு காலாண்டு தவணைகளில் 2011ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரை செலுத்தலாம். சிறப்பு கடன் தீர்வுத் திட்டத்தில் சேரத் தகுதியிருந்தும், சேராதவர்கள் செலுத்த வேண்டிய தொகையில் 25 சதவீதம் 2011ம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் 28ம் தேதிக்குள் செலுத்தி வங்கி, சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மீதமுள்ள தொகையை ஒரே தவணையில் அல்லது அதிகபட்சமாக நான்கு காலாண்டு தவணைகளில் குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஆறு சதவீதம் மட்டும் வட்டி செலுத்தி, அபராத வட்டி மற்றும் இதர செலவினங்களுக்கு தள்ளுபடி செய்து பயன்பெறலாம். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு நகர வங்கிகள், தொடக்க கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்சி வங்கிகள், கூட்டுறவு நகர கடன் சங்கங்கள், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் ஆகியவற்றில் பண்ணை சாராக்கடன்கள் பெற்று 2007ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதிக்குள் தவணை செலுத்தாமல் நிலுவையில் உள்ள கடன்தாரர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெங்காயம் விலை எகிறியது வெள்ளகோவில் மக்கள் அவதி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:53 IST

வெள்ளகோவில்: வரத்து குறைந்துள்ளதால், வெள்ளகோவில் வாரச்சந்தையில் வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை வெள்ளகோவில் புது பஸ் ஸ்டாண்ட் அருகில் வாரச்சந்தை கூடுகிறது. வெள்ளகோவில் பகுதி மக்கள் சந்தையில் பொருட்கள் வாங்க அதிக ஆர்வம் காட்டுகின்றனர். காய்கறி, கீரை வகை மட்டுமின்றி, சட்டை, பேன்ட், ஜமுக்காளம், சேலை, ஜாக்கெட் பிட், பலகாரம் என அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. சென்ற மாதம் பெய்த தொடர் மழையால், பெரிய வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. தொடர் மழையால், பெங்களூரு, தேனி மாவட்டங்களிலிருந்து வெங்காயம் வரத்து தடைபட்டுள்ளது. மழைக்கு முன்பு வரை ஒரு கிலோ பெரிய வெங்காயம் 15 முதல் 17 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது 47 ரூபாய்க்கு விற்பனையாகிறது. தக்காளி கிலோ 30 ரூபாய், சின்ன வெங்காயம் 25 ரூபாய் என விற்கப்பட்டது. வெங்காயம் விலை எகிறியதால் வெள்ளகோவில் மக்கள் அவதிப்படுகின்றனர்.

**கறிக்கோழி கொள்முதல் விலை சரிவு :சில்லரையில் சரியாததால் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,22:59 IST

பல்லடம்:கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை ஒரே வாரத்தில் கிலோவுக்கு ஏழு ரூபாய் சரிந்தது; சில்லரை விற்பனையில் விலை குறையாததால், நுகர்வோர் ஏமாற்றம் அடைந்தனர். பல்லடம் பகுதியில் இருந்து தினமும் சராசரியாக ஆறு லட்சம் கறிக்கோழிகள் தமிழகம், கேரளா மற்றும் கர்நாடக மாநிலத்திற்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. கார்த்திகை மாதம் என்பதால், கறிக்கோழி நுகர்வு வழக்கத்தை விட 30 சதவீதம் சரிந்துள்ளது. "பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி' மூலம் தினமும் பண்ணை கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும். கடந்த வாரம் ரூ.42 ஆக கொள்முதல் விலை இருந்தது. சபரிமலை சீசன் எதிரொலியாக, நுகர்வு சரிந்ததால், கொள்முதல் விலை ரூ.35 என சரிந்துள்ளது. ஒரே வாரத்தில் கிலோவுக்கு ஏழு ரூபாய் சரிவு, சிக்கன் கடை உரிமையாளர் களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. சில்லரை விற்பனையில் விலை குறையாததால், நுகர்வோர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். சில்லரை விற்பனையில் ஒரு கிலோ கறிக்கோழி ரூ.90 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**தேங்காய் பருப்பு வரத்து குறைந்தது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:47 IST

ஈரோடு: அவல்பூந்துறை விற்பனை கூடத்தில் தேங்காய் பருப்பு வரத்து குறைந்தது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் பருப்பு ஏலம் வாரந்தோறும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை நடக்கிறது. அறச்சலூர், பவானி, கவுந்தப்பாடி, வெள்ளகோவில், கொடுமுடி, மொடக்குறிச்சி விவசாயிகள் தேங்காய் பருப்பை ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர். காங்கேயம், வெள்ளகோவில், தூத்துக்குடி மற்றும் கேரளாவை சேர்ந்த வியாபாரிகள் தேங்காய் பருப்பை விலைக்கு வாங்கி செல்கின்றனர். நேற்று நடந்த ஏலத்தில் தேங்காய் பருப்பு முதல் தரம் கிலோ 53 முதல் 55 ரூபாய், இரண்டாம் தரம் 41 முதல் 51 ரூபாய் வரை ஏலம் போனது. முதல் தரத்தில் 1,400 மூட்டை, இரண்டாம் தரத்தில் 1,000 மூட்டை வரத்தானது. சென்ற வாரத்தை விட மூன்று ரூபாய் விலை குறைவாக நேற்று ஏலம் போனது. மொத்தம் 25 லட்சம் ரூபாய்க்கு ஏலம் நடந்தது. மழை மற்றும் குளிர் காலமாக இருப்பதால் தேங்காய் பருப்பு வரத்து குறைவாக உள்ளது. தை மாதம் முதல் சீஸன் துவங்கும்; அந்நேரத்தில் அதிகளவு தேங்காய் பருப்பு வரத்தாகும்.

**மழை காலத்தில் கால்நடை வாங்குவதை தவிர்க்க யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:43 IST

ஈரோடு: ""மழைக்காலத்தில் புதிதாக கால்நடை வாங்குவதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும்'' என, ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் கோபால் கூறியுள்ளார். அவர் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் 2.60 லட்சம் பசு மாடுகளும், 1.90

லட்சம் எருமை மாடுகளும் உள்ளன. மழைக்காலம் என்பதால் விவசாயிகள் கால்நடை வளர்ப்பிலும், பராமரிப்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். கால்நடை வளர்க்கும் கொட்டகை பகுதியில் ப்ளீச்சிங், சலவை சோடா ஆகியவற்றை ஐந்து சதவீதம் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இவற்றால் தொற்றுநோய்க் கிருமிகள் பரவுவது முற்றிலுமாக தடுக்கப்படும். சந்தையில் கால்நடை வாங்குவதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக பெங்களூர் கலப்பினங்கள் வாங்குவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில், பிற மாவட்டத்தில் இருந்து வரும் கால்நடைகள் மூலம் நமது மாவட்டத்தில் இருக்கும் கால்நடைகளுக்கு தொற்றுநோய் பரவ வாய்ப்புள்ளது. கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட இன்னும் ஓரிரு நாட்களில் சென்னையில் இருந்து நான்கு லட்சத்து 80 ஆயிரம் தடுப்பூசிகள் வரவுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

**தென்னை விவசாயிகள் நலவாரிய விண்ணப்ப படிவம் விநியோகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:32 IST

நாமக்கல்: மாவட்ட கலெக்டர் மதுமதி வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் நலவாரியத்துக்கு தென்னை சாகுபடியாளர்களை உறுப்பினர்களாக சேர்ப்பதற்கான படிவம் தோட்க்கலைத்துறை மூலம் விநியோகிக்கப்பட உள்ளது. குறைந்தபட்சம் 50 தென்னை மரங்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மட்டும் இதில் உறுப்பினராக சேரமுடியும். எனவே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தென்னை சாகுபடியாளர்கள் சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்களை சந்தித்து உறுப்பினர் படிவத்தை இலவசமாகப் பெற்று பயனடையலாம். மேலும், உறுப்பினர் சேர்க்கையின் போது இரண்டு கலர் பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ வேண்டும். அதில் ஒரு ஃபோட்டோ விண்ணப்ப படிவத்தில் ஒட்ட வேண்டும். மற்றொரு ஃபோட்டோ பின்னால் விண்ணப்பதாரரின் பெயர் எழுதி விண்ணப்பதுடன் இணைக்க வேண்டும். ஒரு  உறுப்பினருக்கு ஒரு படிவம் மட்டும் வழங்கப்படும். மேலும் விவரங்களை தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகி அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேவை அதிகரிப்பதால் தேங்காய் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:55 IST

ஈரோடு: தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கு தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுவதாலும், தேங்காய் பயன்பாடு தற்போது அதிகமாக இருப்பதாலும் விலை அதிகரித்துள்ளது. கேரளா மற்றும் தமிழகத்தில் இருந்து தினமும் பல்வேறு மார்க்கெட்களுக்கு தேங்காய் ஏற்றுமதி

செய்யப்படுகிறது. தை மாதத்துக்கு மேல் தேங்காய் சீஸன் துவங்கும். தற்போது தேங்காய் விளைச்சல் குறைவாகவே உள்ளது. மேலும், வெளிமாநிலங்களுக்கு தேங்காய் தேவை அதிகரித்துள்ளதால், தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்கின்றனர். கார்த்திகை மாதம் ஐய்யப்ப பக்தர்கள் இருமுடிக்கு அதிகளவு தேங்காய் வாங்குகின்றனர். இதனால், தேங்காய் விலை குறைந்தபட்சம் ஆறு ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 15 ரூபாய் வரை விற்பனையாகிறது. தேங்காய் வியாபாரி மெய்வேல் கூறியதவாது: பொதுவாக தேங்காய் விளைச்சல் தை மாதத்தில் இருந்து துவங்கும். தேங்காய் விளைச்சல் கடந்த ஆண்டை காட்டிலும் நடப்பாண்டு குறைவாகவே உள்ளது. ஈரோட்டில் இருந்து வெளிமாநிலங்களுக்கு தேங்காய் ஏற்றுமதி செய்வதால், போதுமான "ஸ்டாக்' இல்லை. தற்போது ஐய்யப்ப பக்தர்கள் இருமுடிக்காக சிறிய வகையான தேங்காய் அதிகளவு வாங்கி செல்கின்றனர். மக்களுக்கு தேங்காய் தேவை அதிகரித்துள்ளதால், பெரிய தேங்காய் 10 ரூபாயில் இருந்து 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சிறிய தேங்காய் ஆறு ரூபாய்க்கு விற்பனையாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பீட்ரூட் சாகுபடியில் 50 சதவீதம் மகசூல் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,03:01 IST

ஓசூர்: ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டையில் பீட்ரூட் சாகுபடியில் 50 சதவீதம் மகசூல் வீழ்ச்சியடைந்துள்ளது. நல்ல விலை இருந்தும் மகசூல் குறைவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழகத்தில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் காணப்படும் மிதமான தட்பவெப்ப நிலை, நல்ல மண் வளத்தை பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவில் பீட்ரூட் சாகுபடி செய்து வருகின்றனர். ஓசூர், டி.கொத்தப்பள்ளி, உத்தனப்பள்ளி, கெலமங்கலம், பேளகொண்டப்பள்ளி, பூனப்பள்ளி, பேரிகை, பாகலூர் மற்றும் தேன்கனிக்கோட்டை, தளி பகுதியில் 3,000 ஏக்கரில் விவசாயிகள் ஆண்டுமுழுவதும் பீட்ரூட் சாகுபடி செய்து வருகின்றனர்.

இங்கு உற்பத்தியாகும் பீட்ரூட் சென்னை, கோவை, திருச்சி, சேலம், நாமக்கல் மற்றும் தென்மாவட்டங்களுக்கு தினம் ஏற்றுமதியாகிறது. பொதுவாக பீட்ரூட் சாகுபடியில் குறைந்த முதலீட்டில் கூடுதல் வருமானம், நல்ல மகசூலும் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வமுடன் விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் மூன்று மாதத்திற்கு முன் சாகுபடி செய்த பீட்ரூட் அறுவை தற்போது முழுவீச்சில் நடக்கிறது. கடந்த 45 நாளாக பெய்த தொடர் மழையால் பெரும்பாலான விவசாய நிலங்களில் பயிர் செய்த பீட்ரூட் அழுகிவிட்டது. நல்ல தரமான விளைச்சல் கிடைக்கவில்லை. இதனால்,

பிட்ரூட் விலை கிலோ 17 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நல்ல விலை இருக்கும் நிலையில் மழையால் மகசூல் குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.பேளகொண்டப்பள்ளியை சேர்ந்த விவசாயி மஞ்சுநாதப்பா கூறியதாவது:பொதுவாக பீட்ரூட் சாகுபடியில் ஏக்கருக்கு 10 ஆயிரம் முதல் 14 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. பராமரிப்பு செலவும் மிக குறைவு. சாகுபடி செய்த 90 நாளில் அறுவடை செய்து ஏக்கருக்கு 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரை லாபம் ஈட்டலாம்.தற்போது பெய்த மழையால் 50 சதவீதம் மகசூல் வீழ்ச்சியடைந்துள்ளது.

சராசரியாக ஏக்கருக்கு 5 முதல் 7 டன் வரை மகசூல் கிடைக்கும். தற்போது மழைசேதத்தால் 4 டன் மட்டும் கிடைக்கிறது. உள்ளூர் மற்றும் வெளியூர் மார்க்கெட்டுகளில் நல்ல விலை இருந்தும், மகசூல் குறைந்துள்ளதால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. உடனடியாக நிலத்தை உழுது பராமரித்து அடுத்த போக சாகுபடியும் செய்ய முடியவில்லை.இவ்வாறு அவர் தெரிவித்தார்.ஓசூர் உழவர்சந்தைக்கு 2 டன் மட்டும் வருகைஓசூர் உழவர்சந்தைக்கு தினம் 120 டன்னுக்கு மேல் விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். பீட்ரூட் மட்டும் 4 டன் வந்து கொண்டிருந்தது. தற்போது மழை சேதத்தால் 2 டன் மட்டும் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இதனால், உழவர்சந்தை மற்றும் வெளிமார்க்கெட்டுகளில் பீட்ரூட்டுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தட்டுப்பாட்டால் வியாபாரிகளும், சில்லறை விற்பனையாளர்களும் பீட்ரூட்டை கூடுதல் விலைக்கு விற்று நல்ல லாபம் சம்பாதிக்கின்றனர்.

**நிலக்கடலையில் பூச்சி, நோய் தாக்குதல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:25 IST

நாமக்கல்: "நிலக்கடலையில் தோன்றும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கையாள வேண்டும்' என, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: எண்ணெய் வித்துப்பயிர்களில் முக்கியமான பயிரான நிலக்கடலை பயிர் கோடை பருவத்தில் ஜூன், ஜூலை மாதங்களிலும், கார்த்திகைப் பட்டத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் பயிரிடப்படுகிறது.
டி.எம்.வி.,7, வி.ஆர்.ஐ.,1, கோ 1 போன்ற ரகங்கள் பெரும்பாலும் இந்த பருவத்தில் பயிரிடப்படுகிறது. நிலக்கடலை பயிர் சாகுபடி செய்ய முதலில் நிலத்தை டிராக்டர் மூலம் நன்கு உழவு செய்ய வேண்டும். நன்கு உழுது பண்படுத்திய நிலத்தில் ஏக்கருக்கு ஐந்து டன் மக்கிய

தொழு உரம் கடைசி உழவுக்கு முன் இடவேண்டும். முறைப்படி மண் பரிசோதனை செய்து பரிந்துரைப்படி உரமிட வேண்டும். அல்லது பொதுமான உரபரிந்துரையாக இறவை நிலக்கடலைக்கு தழை, மணி, சாம்பல் சத்து ஏக்கருக்கு முறையே 7:14:21 கிலோ என்ற அளவில் இடவேண்டும். நிலக்கடலை நுண்ணூட்ட கலவையினை ஏக்கருக்கு ஐந்து கிலோ அளவில் மண்ணுடன் கலந்து 20 கிலோவாக விதைப்புக்கு பின் மேலாக தூவிவிட வேண்டும். விதையளவாக இறவை நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு 50 கிலோ விதை பருப்பு தேவைப்படும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ., மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ., இடைவெளியில் விதைப்பு செய்ய வேண்டும். நன்கு முற்றிய தரமுள்ள பூச்சி, நோய் தாக்காத விதை பருப்பை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைகோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூஞ்சானக்கொல்லி கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்புக்கு முன் நிலைக்கடலை விதைகளை தரம் பிரிக்க நன்கு நனைக்கபபட்ட பைகள் மீது விதைகளை பரப்பி அதன் மீது நன்கு நனைத்த சணல் பைகளை 20 மணி நேரம் மூடி வைத்திருக்க வேண்டும். பின் முளைப்பு தோன்றிய விதைகளை மட்டும் எடுத்து நிழலில் உலர்த்தி விதைப்பதன் மூலம் 95 சதவீதம் முளைப்புத்திறன் அடையலாம். களை நிர்வாகமாக களைகளை கட்டுப்படுத்த இறவை நிலக்கடலை பயிருக்கு புளுகுளோரலின் ஏக்கருக்கு 800 மி., என்ற அளவில் விதைத்த மூன்று நாட்களுக்குள் தெளிக்க வேண்டும். நிலக்கடலை இறவை பயிருக்கு நீர் நிர்வாகம் மிகவும் இன்றியமையாத ஒன்று. நிலக்கடலை பயிரின் வளர்ச்சி நிலைகளை பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த உடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின் நான்கு ஐந்து நாட்கள் கழித்து உயிர் நீர் பாய்ச்ச வேண்டும். பக்கக்கிளை தோன்றும் சமயத்தில் இரண்டு முறை நீர் பாய்ச்ச வேண்டும். ஏக்கருக்கு 160 கிலோ அளவில் 45வது நாளில் ஜிப்சம் இட்டு செடிகளை சுற்றி மண்அணைக்க வேண்டும். நிலக்கடலையில் தோன்றும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை ஆரம்பம் முதலே கண்காணித்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அனைத்து பயிருக்கும் இலவச மின்சாரம்: காவிரி நீர்ப்பாசன நலச்சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,03:15 IST

திருச்சி: "நெல், கரும்புக்கு மட்டும் தான் இலவச மின்சாரம் என்று தமிழக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளது, விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது எனவே, மரப்பயிர்கள் தவிர அனைத்து பயிர்களுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவிக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் நலச்சங்கம் செயல் தலைவர் ராஜாராம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: முருங்கை, முந்திரி, சப்போட்டா, கொய்யா போன்ற மரப்பயிர்களுக்கு இலவச மின்சாரம் அறிவிக்கப்படவில்லை என்று தமிழக முதல்வர் கூறுவதை ஏற்கிறோம். நெல் மற்றும் கரும்புக்குத் தான் இலவச மின்சாரம் தரப்படுகிறது

என்று முதல்வர் கூறியிருப்பதுதான் விவசாயிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் தவிர மற்ற மாவட்டங்களில் விவசாயிகள் வாழை, தென்னை, மஞ்சள், வெற்றிலை போன்ற பயிர்களைத் தான் பல நூற்றாண்டுகளாக பயிர் செய்து வருகின்றனர். காவிரிப்பாசன விவசாயிகளைத் தவிர மற்ற கிணற்றுப்பாசன விவசாயிகள் மின்சார மோட்டார் மூலம் தான் வாழை, கரும்பு, வெற்றிலை மஞ்சள் பயிர்களை பயிர் செய்து வரகின்றனர். இலவச மின்சாரம் அறிக்கப்பட்ட பிறகு இந்த விவசாயிகளும் பயிர் பாகுபாடு இல்லாமல இலவச மின்சாரம் பெற்று வருகின்றனர்.
நெல், கரும்புக்குத் தான் இலவச மின்சாரம் என்று அரசு அறிவிக்க விரும்பினால் நேரடியாக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்கின்றனர். மின்சாரக் கட்டணம் கட்டி வந்த விவசாயிகளுக்கு இலவசம் அறிவித்து, இப்போது நெல், கரும்புக்குத் தான் இலவசம் என்று கூறுவது குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. முதல்வர் கருணாநிதி ஏற்கனவே இலவச மின்சாரம் பெற்றவர்கள் வாழை, வெற்றிலை, மஞ்சள் என்று எந்தப் பயிர் செய்தாலும் இலவச மின்சாரம் தொடரும் என்று தமிழக முதல்வர் அறிவிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**வெற்றிலை வாடல்நோய் பாதிப்புதோட்டக்கலைத்துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:38 IST

கரூர்: கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட லால ாப்பேட்டை, மகாதானபுரம், கிருஷ்ணராயபுரம், மேட்டு திருக்காம்புலியூர் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றி லை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கற்பூரி, வெள்ளைகொடி ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரம் பெய்த மழையால் வெற்றிலைகளில் தண்ணீர் அதிகமாக தேங்கி வாடல்நோய் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழையும், பின் வெயில் அடி ப்பதால் தற்போது இந்நோய்க்கான அறிகுறி அதிகளவு தென்படுகிறது. குறிப்பாக கிருஷ்ணராயபுரம், மேட்டுத்திருக்காம்புலியூர், லாலாப்பேட்டை பகுதியில் வெற்றி லை கொடிக்கால்களில் வாட ல்நோய் பரவலாக தென்படுகிறது. இதனால், விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.வாடல்நோய் தாக்காமல் பாதுகாப்பது குறித்து கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்ததாவது:வாடல் நோய் தவிர்க்க, முதற்கட்டமாக கொடிக்கால்களில் உள்ள உபரிநீரை வெளியேற்ற வேண்டும்.

டிரைக்கோ தர்மா 2 கிலோ, நன்கு மக்கிய தொழு உரம் 250 கிலோ, வேப்பம்புண்ணாக்கு இரண்டரை ஏக்கர் அளவுக்கு 25 கிலோ என்ற அளவில் நன்கு கலந்து கொடியை சுற்றி மண்ணில் இட வேண்டும். போர்டோ கலவை 0.25 சதவீதம் தயார் செய்து ஊற்றி வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்.போர்டோ கலவை தயார் செய்ய முடியாத விவசாயிகள் காப்பர் ஆக்ஸ்

குளோரைடு மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில், 2 கிராம் வீதம் நன்கு கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும். மறுநாள் சிங்க் சல்பேட் ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும் இவ்வாறு செய்தால் வெற்றிலையின் வாடல்

**வேளாண் விளைபொருள்விலை முன்னறிவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:13 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் கார்த்திகை பட்டத்தை முன்னிட்டு, விலை முன்னறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.வேளாண் துணை இயக்குநர் (வணிகம்) சிவசங்கரன் வெளியிட்ட அறிக்கை: கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தால் கார்த்திகை பட்ட வேளாண் விளைப்பொருட்களின் விலை முன்னறிவிப்பு செய்தி வெளியிட்டுப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் கொத்தமல்லி பயிரிடப்படுகிறது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் ஆய்வின்படி ஃபிப்ரவரி,மார்ச் 2011ல் அறுவடையின்போது கொத்தமல்லி விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாய் முதல் 3,200 ரூபாய் வரை நிலவும் என தெரிவித்துள்ளது.வறட்சியான நிலங்களில் வளரும் கம்பு கோழி தீவனமாகவும் மற்றும் கால்நடை தீவனமாகவும் பயன்படுகிறது. சந்தையில் நிலவி வந்த கம்பின் விலைகளை ஆய்வு செய்த கார்த்திகைப்பட்டத்தில் கம்பு பயிரிடும் விவசாயிகளுக்கு அறுவடை மாதங்களான ஃபிப்ரவரி, மார்ச் 2011ல் குவிண்டாலுக்கு 750 ரூபாய் முதல் 875 ரூபாய் விலை கிடைக்கும் என தெரிவித்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வேளாண் பட்டப்படிப்பு துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:29 IST

கும்பகோணம்: ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு வேளாண் பட்டப்படிப்பு துவங்கப்பட்டுள்ளது.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்ககம் மூன்றாண்டு இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

பட்டப்படிப்பினை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் ஆடுதுறையில் துவக்கி வைத்து பேசியதாவது:வேளாண்மை மற்றும் வேளான் சார்ந்த உபதொழிலில் ஈடுபட்டுள்ள உழவர் பெருமக்கள் மற்றும் சுயதொழில் தொடங்க முயல்வோர்களும், அனைத்து வேளாண் தொழில் நுட்பங்களையும் தெரிந்துகொண்டு வேளாண்மையில் பயன்பெரும் வகையில்

இப்புதிய தொழில்நுட்ப பட்டப்படிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. உழவர் பெருமக்கள் தாமும் ஒரு பட்டதாரி என்ற சுய கவுரவத்தை பெற்றிடவும் இந்த பட்டப்படிப்பு வழிவகுக்கும்.இந்த இளநிலை பண்ணை தொழில்நுட்ப படிப்பின் நேரடி பயிற்சிகள் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் மாதம் இரண்டு நாட்களில் ஆறுமாதங்கள் அடங்கிய ஆறு பருவங்களில் நடக்கும். இவ்வாறு அவர் பேசினார்.பட்டப்படிப்பில் சேர்ந்துள்ள 29 காவிரி பாசனப்பகுதி விவசாயிகள் சேர்ந்துள்ளனர்.

**தொடர் மழையால் துவரை சாகுபடி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 13,2010,02:52 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பெய்த தொடர் மழையை தொடர்ந்து கிணற்று பாசன பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த துவரை பயிர்கள் பாதிப்படைந்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் துவரை செடிகளை பிடுங்கி விளை நிலங்களுக்கு இயற்கை உரங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் பருப்பு வகை பயிர் 18,368 ஹெக்டேரில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டாய் துவரம் பருப்புக்கு மார்க்கெட்டில் அதிக விளை கிடைத்து வருவதால், பெரும்பாலான விவசாயிகள் இறவை பாசன பகுதியில் துவரை பயிர் செய்ய அதிகம் ஆர்வம் காட்டினர்.

தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாலக்கோடு ஆகிய மேட்டு பாங்கான நிலப்பரப்புள்ள பகுதியில் துவரை சாகுபடி அதிக அளவில் செய்யப்பட்டு வருகிறது. கடந்த புரட்டாசி, ஐப்பாசி மாதத்தில் பெய்த சிறு மழையை பயன்படுத்தி பென்னாகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியிலும், பாலக்கோடு, காரிமங்கலம், அதனூர், தும்பலஅள்ளி உள்ளிட்ட பகுதியில் 500 ஏக்கருக்கு மேல் துவரை சாகுபடி செய்தனர்.

சோளத்துக்கு ஊடுபயிராக துவரை செடிகளை சாகுபடி செய்திருந்தனர். தற்போது துவரை செடிகள் நன்கு வளர்ந்து பூக்கள் பூத்து குலுங்கிய நிலையில் கடந்த ஒரு மாதமாக பெய்த தொடர் மழையை தொடர்ந்து பூக்கள் அனைத்து உதிர்ந்தது.

துவரை சாகுபடியை பொறுத்த வரையில் துவரை பூ பூத்து அதன் பின் காய்கள் விட்டு, பருத்து அறுவடைக்கு வர மூன்று முதல் நான்கு மாதங்கள் ஆகும். சாகுபடி செய்யப்பட்ட ஒன்று முதல் ஒன்றரை மாதத்தில் பூக்கள் பூத்து குலுங்கிய நிலையில் செடிகளில் இருந்த பூக்கள் அனைத்தும் உதிர்ந்து விட்டதால், காய்கள் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போனது.

இதனால், துவரை சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் விவசாயிகள் துவரை செடிகளை பிடுங்கி

நெல் நடவுக்கான பணிகளில் இறங்கியுள்ளனர். வயல்வெளிகளில் பிடுங்கப்படும் துவரை செடிகள் மாட்டு தீவனத்துக்கும், வயல்வெளிகளில் இயற்கை உரங்களுக்கும் உழுது செடிகளை பரப்பு மீண்டும் உழுது நெல் நடவு செய்வதற்கு விவசாய நிலங்களை தயார்படுத்தும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து அத்தனூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது:துவரம் பருப்புக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், வேளாண் துறை மூலம் துவரை சாகுபடி செய்ய அறிவுரைகள் வழங்கினர். ஆறு மாத பயிரான துவரையில் இறவை பாசனத்தில் நல்ல வருவாய் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் துவரை சாகுபடி செய்தோம். ஒரு ஏக்கருக்கு 8,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரையில் செலவு செய்து சாகுபடி செய்திருந்தோம்.ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை வரையில் விவசாயிகளுக்கு துவரை அறுவடையில் கிடைக்கும். தற்போது பெய்த தொடர் மழை காரணமாக பூக்கள் உதிர்ந்து காய்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போனது. இதனால், ஒரு ஏக்கருக்கு 10,000 முதல் 12,000 ரூபாய் வரையில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
பெரும்பாலும் வீரிய ரக துவரைகளில் மட்டுமே அதிக அளவில் பூக்கள் உதிர்ந்துள்ளது. துவரை செடிகளை அழித்து விட்டு தற்போது மழையால் நீர் ஆதாரம் அதிகரித்து இருப்பதால் நெல் சாகுபடியில் இறங்கியுள்ளோம்.இவ்வாறு அவர்கள் கூறினார்.

565 விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,23:13 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டை பகுதிகளில் 565 விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகையாக 14 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. பரங்கிப்பேட்டை மற்றும் பு.முட்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் கடந்த 2009 -2010ம் ஆண்டில் பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. பரங்கிப்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 159 விவசாயிகளுக்கு 4 லட்சத்து 94 ஆயிரம் ரூபாயை வங்கி செயலாளர் சக்கரபாணி வழங்கினார். பு.முட்லூரில் கடன் பெற்ற 396 விவசாயிகளுக்கு 7 லட்சத்து 65 ஆயிரத்து 227 ரூபாயும், கடன் பெறாத 41 விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 812 ரூபாயும் வங்கி செயலாளர் பார்த்திபன் வழங்கினார். விழாவில் காசாளர்கள் பாஸ்கர், சிவனேசன், திருமணநாயர் பங்கேற்றனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களை வேளாண்மைத் துறை அலுவலர்கள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,23:11 IST

விருத்தாசலம் : பூதாமூர் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களை வேளாண்மைத் துறை அலுவலர்கள் விஞ்ஞானிகளுடன் சென்று ஆய்வு செய்தனர். விருத்தாசலம் அடுத்த பூந்தோட்டம், பூதாமூர், ஏனாதிமேடு ஆகிய பகுதிகளில் உள்ள வயல் வெளிகளில் நடவு செய்யப்பட்ட சம்பா நெற்பயிர்கள் மழையால் பாதிக்கப்பட்டன. இவற்றை வேளாண்மைத் துறை அலுவலர்கள் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகளுடன் நேரில் சென்று ஆய்வு செய்தனர். அப்போது விவசாயிகளின் கருத்துகளை கேட்டறிந்தவர்கள் மேலான நடவு தொழில் நுட்பம் குறித்தும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினர். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஹரிதாஸ், அறிவியல் நிலைய விஞ்ஞானி ராஜி,  வேளாண் அலுவலர் விஜயகுமார், உதவி அலுவலர்கள் செல்லப்பன், பிரகாஷ், மகேஸ்வரி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

**மழை பாதித்த பயிர்கள் வளர வழிமுறை:வேளாண் உதவி இயக்குனர் யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,01:31 IST

திருத்துறைப்பூண்டி: தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை வளரச் செய்ய தேவையான வழிமுறைகள் குறித்து வேளாண் உதவி இயக்குனர் நடேசன் யோசனைகள் தெரிவித்துள்ளார்.திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கடந்த வாரங்களில் தெ ொடர்ந்து பெய்த கனமழையால் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர்கள் பத்து நாட்களுக் கு மேலாக மழைநீரில் மூழ்கி இருந்தது. இதனால், நெற்பயிர்களின் வேர்களுக்கு போ திய ஆக்சிஜன் கிடைக்காததா ல் கருமை நிறமாக மாறி, நெற்பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை பூமியில் இரு ந்து எடுத்து பிற பாகங்களுக்கு எடுத்துச் செல்ல வேர் திறனின்றி உள்ளது. இதனால், நெற்பயிர்கள் முற்றிலும் அழு கி விடும் நிலையில் உள்ளது.மழைநீர் வடிந்ததும், நடவு ஆட்களைக் கொண்டு நெல் வயலை நன்கு மிதித்து விட வேண்டும். இதனால், வேர்ப்பகுதிக்கு காற்றோட்டம் கிடைப்பதால், செயலற்று கிடக்கும் வேர்கள், தூண்டிவிட்டு வேர்களின் வளர்ச்சி தூண்டிவிடப்படுவதால் புதிய வேர்கள் தோன்றி நிலத்தில் இருந்து பயிருக்கு தேவையான சத்துக்களை எடுக்கும் திறன் அதிகரிக்கும்.இதனால், பயிர் முற்றிலும் அழிவதில் இருந்து பாதுகாக்கப்படுகிறது. எனவே, கட்டாயம் தண்ணீர் வடிந்ததும் நடவாட்களைக் கொண்டு நெல் வயலை நன்கு மிதித்துவிட்டு, பின் ஒரு ஏக்கருக்கு தேவையான யூரியா 22 கிலோவுடன் நான்கு கிலோ வேப்பம் புண்ணாக்கை கலந்த பின், 17 கிலோ பொட்டாஷ், 18 கிலோ ஜிப்சம் ஆகியவற்றை கலந்து இட வேண்டும். யூரியாவுடன் வேப்பம்புண்ணாக்கு கலந்து விடுவதால் தழைச்சத்து வீணாவது தடுக்கப்பட்டு,

அதிக அளவு தழைச்சத்து பயிருக்கு கிடைக்கச் செய்கிறது. இதனால், பயிரின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. பொட்டாஷ் இடுவதால் பயிருக்கு வலிமையும், பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு தன்மை கூடுகிறது.

நுண்ணூட்டத்தின் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க ஏக்கருக்கு ஐந்து கிலோ நெல் நுண்ணூட்டத்துடன் 50 கிலோ ஆட்டு எரு கலந்து இடுவதால் பயிர்கள் நுண்ணூட்டங்களை எடுத்துக் கொண்டு செழித்து வளரும். இந்த உர நிர்வாக முறையை கடைபிடித்தால் மழை நீரில் இருந்து அழுகிய பயிரை ஓரளவு காப்பாற்றி, உற்பத்தியை அதிகாரிக்கலாம்.

நெல் நுண்ணூட்டம் 50 சதவீத மானிய விலையில் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்று திருத்துறைப்பூண்டி வேளாண் உதவி இயக்குனர் நடேசன் கேட்டுக் கொண்டார்.

**விவசாயிகள்கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,21:26 IST

திண்டுக்கல்:தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறியதாவது: மா, நெல்லி, கோ-கோ கன்றுகள் நடவு செய்ய தருணம் இது. தேவையான கன்றுகள் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் உள்ளது. 75 சதவீத மான்யத்தில் வழங்கப்படும் கன்றுகளை உரிய ஆவணங்களை காட்டி விவசாயிகள் பெற்று கொள்ளலாம்,' என்றார்.

**வாழை, தக்காளி, சுரைக்காயில் நோய் தாக்குதலால் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,20:51 IST

தேனி:தேனி சுற்றுக்கிராமங்களில் வாழை, அவரை, தக்காளி, வெள்ளரி, கரும்பு, சுரைக்காய் போன்ற பயிர்கள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன. தேனி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக விவசாயிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக போடேந்திரபுரம், உப்புக்கோட்டை, குச்சனூர், கூழையனூர், குண்டல்நாயக்கன்பட்டி, உப்பார்பட்டி, பாலார்பட்டி உட்பட பல கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை விவசாயம் கருகல் நோய் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. வாழை இலைகள் தீயில் வெந்தது போல் கருகி காணப்படுகின்றன. இதனால் வாழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தக்காளி முழுக்க அழுகிவிட்டன. அவரைக்காயில் கூட்டுப்புழுக்கள் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. வெள்ளரி, சுரைக்காயிலும் அழுகல் நோய் பாதிப்பு அதிகம் உள்ளது. கரும்பில் கத்தாழை நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இக்கிராமங்களில்

மட்டும் ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் தோட்டக்கலை சாகுபடி பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது.

ஆனாலும் கிராம நிர்வாக அலுவலர்களோ, தோட்டக்கலைத்துறையினரோ மழை பாதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்த வரவில்லை. நோயில் இருந்து பாதுகாக்க தோட்டக்கலைத்துறை ஆலோசனையும் வழங்கவில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இப்பகுதியில் நெல் வயல்கள் பல நாள் நீரில் மூழ்கி கிடந்ததால், பாதிக்கும் மேற்பட்ட வயல்களில் கதிர்களிலேயே நெல் முளைத்து வீணாகி விட்டது. நெல் விவசாயம் பலத்த சரிவை சந்தித்துள்ள நிலையில் தோட்டக்கலை விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.மாவட்ட நிர்வாகம் இப்பகுதியில் உள்ள விவசாயிகளையும், நிலங்களையும் கள ஆய்வு செய்து பாதிப்பு விவரங்கள் குறித்து மீண்டும் கணக்கெடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

**மாத இறுதியில் பயிர்க் காப்பீடு தொகை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,22:27 IST

கடலாடி:""2009ல் பயிர்க்காப்பீடு செய்தவர்களுக்கு இம்மாத இறுதியில் வழங்கப்படும் ,"என, கடலாடியில் நடந்த ஒன்றிய கவுன்சில் கூட்டத்தில் அதன் தலைவர் ராஜசேகர் கூறினார்.கடலாடி ஒன்றிய கவுன்சில் கூட்டம் தலைவர் ராஜசேகர் தலைமையில் நடந்தது . ஒன்றிய துணை தலைவர் சுப்பிரமணியன்,ஆணையர்கள் ஆர். கணேசன் , முத்திளங்கோவன் ( ஊராட்சி) முன்னிலை வகித்தனர். கவுன்சிலர்கள் விவாதம்: வி. சி. மனோகரன் : பெருமாள்தலைவனேந்தல் ரோடு எப்போது போடப்படும்? ரோட்டிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? தலைவர்: 46 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விலைவாசியின் ஏற்றத்தால் மறுமதிப்பீடு செய்யப்படும். முத்துமாரி : மரவெட்டி கிராம ரோடு டூவிலர் கூட செல்ல முடியாதளவு படு மோசமாக உள்ளது. தலைவர்: பழுதடைந்த 36 ரோடுகளை கணக்கில் எடுத்துள்ளோம்.

இதற்காக 4 கோடிரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் சொல்லும் ரோடும் மராமத்துசெய்யப்படும். கண்ணன் : பி. எம். சி ரோடுகள் அனைத்தும் நான்கு ஆண்டாகியும் மராமத்துசெய்யாமல் உள்ளது. தலைவர்; அதற்கான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மழையால் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. விவேகானந்தன் : கலைஞர் வீட்டு வசதி திட்டதின் கீழ் நடக்கும் பணிகள் குறித்த விபரம் தருவதில்லை. அதற்கு பைல்கள், பதிவேடு வாங்கிய செலவுகள் மட்டும் கூட்டத்தில் வைக்கப்படுகிறது. தலைவர்: இது குறித்த அனைத்து விபரங்களும் கவுன்சிலர்கள் அனைவருக்கும் வழங்கப்படும். கண்ணன் : கடந்த இரண்டு ஆண்டாக மிளகாய்க்கு காப்பீடு செய்தும், இதுவரை

அதற்கான காப்பீடு வழங்கவில்லை. தலைவர்: மிளகாய்க்கு காப்பீடு கிடைக்க வழிவகை செய்யும்படி அமைச்சரிடம் வலியுறுத்துவோம். கடந்தாண்டு பயிர்க்காப்பீடு செய்தவர்களுக்கு இம்மாத இறுதிக்குள் காப்பீடு வழங்கப்படும் . கவுன்சிலர்கள், அலுவலக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**பெரியாற்று வெள்ளத்தால் நெல் அறுவடை செலவுகள் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,20:54 IST

தேனி:குண்டல்நாயக்கன்பட்டி, பாலார்பட்டி கிராம விவசாயிகளுக்கு ஆற்றில் நீர் வரத்து அதிகம் உள்ளதால் நெல் அறுவடை செலவுகள் அதிகரித்துள்ளது. தேனி அருகே உள்ள குண்டல்நாயக்கன்பட்டி, பாலார்பட்டி, உப்புக்கோட்டை கிராமங்களை சேர்ந்தவர்களுக்கு பெரியாற்றின் மறுகரையில் உள்ள உப்பார்பட்டியில் 200 ஏக்கர் நிலங்களில் வயல்கள் உள்ளன. ஆனால் உப்பார்பட்டியில் நெற்கதிர் அடிப்பதற்கு களம் உட்பட எந்த வசதிகளும் இல்லை.எனவே இவர்கள் கட்டுகளாக கட்டி, பெரியாற்றை கடந்து தங்கள் கிராமத்திற்கு சுமந்து சென்று கொண்டு போய் சேர்ப்பர்.

இதற்காக விவசாயிகள் அதிக பட்சம் ஒரு கி.மீ., தூரம் மட்டும் நடப்பது வழக்கம். தற்போது ஆற்றில் நீர் வரத்து உள்ளதால் நெல் கட்டுகளை தலைச்சுமையாக சுமந்து ஆற்றினை கடக்க முடியாது. எனவே நெல் கட்டுகளை டிராக்டரில் ஏற்றி வீரபாண்டி, போடேந்திரபுரம், உப்புக்கோட்டை வழியாக 15 கி.மீ., தூரம் சுற்றி கொண்டு செல்ல வேண்டியதுள்ளது. ஒரு முறை டிராக்டர் கட்டுகளை ஏற்றி வர 30 கி.மீ., பயணிக்க வேண்டும். இதற்கு வாடகை செலவு மட்டும் ஆயிரம் ரூபாயினை கடந்து விடுகிறது. ஒரு ஏக்கருக்கு இரண்டு லோடு ஏற்ற வேண்டும். ஏற்று கூலியினையும் சேர்த்து விவசாயிகள் ஏக்கருக்கு மூவாயிரம் ரூபாய் செலவாகிறது. தற்போதைய மழையில் அதிகளவு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த கூடுதல் செலவும் விவசாயிகளுக்கு சுமையாக உள்ளது. எனவே உப்பார்பட்டிக்கும், குண்டல்நாயக்கன்பட்டிக்கும் இடையே பெரியாற்றின் குறுக்கே நடைபாலம் கட்டித்தர வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**வேளாண் திட்டத்தில் காப்பீடுசெய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,23:21 IST

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.காரீப் பருவத்தில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள், ஏக்கருக்கு பிரிமியம் தொகையாக 117 ரூபாய் செலுத்த வேண்டும். கடன் பெற்ற விவசாயிகள் 130 ரூபாய் செலுத்த வேண்டும். வெள்ளம், வறட்சி காரணமாக பயிர் பாதிக்கும் போது இழப்பீடாக 13 ஆயிரத்து 24 ரூபாய் பெறலாம்.ராஜபாளையம் பகுதியில் அயன்கொல்லங்கொண்டான், சேத்தூர், சோழபுரம். ஸ்ரீவில்லிப்புத்தூரில் கீழராஜகுலராமன், வத்திராயிருப்பு, விருதுநகர் பகுதியில் ஒண்டிப்புலி நாயக்கனூர், வச்சகாரப்பட்டி, ஆமத்தூர், திருச்சுழி பகுதியில் மண்டபசாலை, பரளச்சி, நரிக்குடி பகுதியில் எ.முக்குளம்,வீரசேழன், காரியாபட்டி பகுதியில் கல்குறிச்சி, முடுக்கன் குளம், மல்லாங்கிணர் ஆகிய பகுதிகளில் உள்ள நெல் விவசாயிகள் பயன் பெறலாம். பிரிமியம் தொகையை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் டிச. 15 க்குள் செலுத்த வேண்டும்.

**விவசாய தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,23:12 IST

காட்டுமன்னார்கோவில் :காட்டுமன்னார்கோவிலில் விவசாய தொழிலாளர்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட அமைப்பாளர் புலவேந்திரன் தலைமை தாங்கினார். நாகராஜன், ஜெயச்சந்திரன், சின்னசாமி முன்னிலை வகித்தார். மாநில அமைப்பாளர் ராஜசேகர், மாவட்ட அமைப்பாளர் தனவேல், முத்துராமானுஜம் பங்கேற்றனர்.
ஆர்ப்பாட்டத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழைகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு 5,000 ரூபாய் நிவாரண தொகை உடனடியாக வழங்க வேண்டும். வேலை இழந்த தொழிலாளர்களுக்கு 50 கிலோ அரிசி, 5 லிட்டர் மண்ணெண்ணை, பயிர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் உட்பட பல கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**மீன் உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,23:09 IST

சேத்தியாத்தோப்பு :மீன் உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தென்னாற்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனை சங்க முன்னாள் தலைவர் அப்பாதுரை கலெக்டர் சீத்தாராமனுக்கு அனுப்பியுள்ள மனு: கடலூர் மாவட்டத்தில் பெய்த கன மழையால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தைச் சார்ந்த தொழிலான மீன் வளர்ப்பு மற்றும் மீன் குஞ்சுகள் உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் நுண் மீன் குஞ்சு வலைகள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. காட்டுமன்னார்கோவில், குமராட்சி, புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை, குறிஞ்சிப்பாடி, கம்மாபுரம் ஒன்றியங்களில் ஊராட்சி குளங்கள், சொந்தமாக குளம் வெட்டி மீன் வளர்ப்பு செய்யும் உள்நாட்டு மீன் வளர்ப்போர்கள், நுண் மீன் குஞ்சு உற்பத்தியாளர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, மீன் உற்பத்தியாளர்களுக்கும் வெள்ள நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எண்ணெய் பனை சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,22:26 IST

அவலூர்பேட்டை : மேல்மலையனூரில் எண்ணெய் பனை சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி நடந்தது. சேர்மன் அன்பழகன் தலைமை தாங்கினார். மேல்மலையனூர் வேளாண் உதவி இயக்குனர் ஏழுமலை வரவேற்றார். பயிற்சியை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் துவக்கி வைத்தார். துணை இயக்குனர் அன்பழகன், மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை திட்ட மேலாளர் ராஜசேகரன் கருத்துரை வழங்கினர். கலெக்டரின் நேர்முக உதவியாளர் சக்கரவர்த்தி, சுப்பிரமணியன், நவநீதகிருஷ்ணன், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். துணை வேளாண் அலுவலர் சாந்தலட்சுமி நன்றி கூறினார்கூறினார்.

**சின்னவெங்காயத்துக்கு திண்டுக்கல்லில் கிராக்கி : விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,00:43 IST

பல்லடம் : திண்டுக்கல் வெங்காய சந்தைகளில், சின்னவெங்காயத்துக்கு 10 ரூபாய் வரை கூடுதல் விலை கிடைக்கிறது. பல்லடம் பகுதி வெங்காய விவசாயிகள், இருப்பு வைத்துள்ள சின்ன வெங்காயத்தை திண்டுக்கல்லுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் ஒவ்வொரு பருவமும் 4,000 ஏக்கர் பரப்பளவிற்கு மேல் சின்னவெங்காயம் சாகுபடி செய்து அறுவடை செய்யப்படுகிறது. தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் பல்லடம், சுல்தான்பேட்டை உள்பட, சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருந்த பல பகுதிகளில் வெங்காயம் அழுகி சேதமடைந்தது; வெங்காய வரத்தும் வெகுவாக குறைந்துள்ளது. திண்டுக்கல்லில் வெங்காய மார்க்கெட், வாரத்தில் மூன்று நாட்கள் நடக்கிறது. இங்கு பழைய தரமான சின்னவெங்காயம், வியாபாரிகளால்

கொள்முதல் செய்யப்பட்டு இலங்கை, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.திருப்பூர், கோவை, கேரள பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பல்லடம் பகுதியில் தரமான நாட்டு ரக சின்ன வெங்காயம் இருப்பு வைத்துள்ள விவசாயிகளிடம், ஒரு கிலோ 30 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விலை கொடுத்து கொள்முதல் செய்கின்றனர். ஆனால், திண்டுக்கல் வெங்காய மார்க்கெட்டில் ஒரு கிலோ குறைந்தபட்சம் 40 ரூபாய் முதல் 45 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.இதனால் பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் சின்னவெங்காயம் இருப்பு வைத்துள்ள விவசாயிகள் பலர், திண்டுக்கல் மார்க்கெட்டுக்கு சின்னவெங்காயத்தை கொண்டு சென்று விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். திண்டுக்கல் மார்க்கெட்டில், சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**நிலக்கடலை வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,22:52 IST

வெள்ளகோவில்: தொடர் மழை ஓய்ந்ததையடுத்து, வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்துக்கு கடந்த வாரத்தை விட அதிகளவு நிலக்கடலை வந்தது. சின்ன தாராபுரம், லக்கமநாயக்கன்பட்டி, ஒத்தமாந்துறை பகுதிகளை சேர்ந்த ஏழு விவசாயிகள் 42 மூட்டை நிலக்கடலை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்; கடந்த வாரத்தை விட, 22 மூட்டை அதிகம். முதல் தரம் ரூ.38.57; இரண்டாம் தரம் ரூ.33.05 என விலை நிர்ணயம் செய்து, வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். மொத்தம் 57 ஆயிரத்து 691 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**76,500 ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி புதுகை வேளாண்மை அதிகாரி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,01:52 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை 76 ஆயிரத்து 500 ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி முடிக்கப்பட்டுள்ளதாக வேளாண்மைத் துறை அறிவித்துள்ளது.வேளாண் இணை இயக்குனர் தங்கவேலு வெளியிட்ட அறிக்கை:புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சற்று தாமதமாக துவங்கினாலும் வழக்கத்தை விட அதிகமாக பெய்துள்ளது. ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் முடிய 70 முதல் 75 செ.மீ., வரை வடகிழக்கு பருவமழை பெய்வது வழக்கம் இந்த ஆண்டு இதுவரை 85 செ.மீ., மழை பெய்துள்ளது.இதன்காரணமாக மாவட்டத்தில் ஒருசில மிகப்பெரிய நீர்நிலைகளை தவிர்த்து இதர அனைத்து நீர்நிலைகளிலும் தண்ணீர் நிரம்பியுள்ளது. மானாவாரி குளங்களில் மூன்று மாதம்

முதல் ஐந்து மாதம் வரையிலும் பாசனம் செய்வதற்கான தண்ணீர் இருப்பு உள்ளது. இதன்மூலம் தண்ணீர் தட்டுப்பாடின்றி சம்பா சாகுபடியை வெற்றிகரமாக முடிக்க வாய்ப்பு உள்ளது.பயிர் சாகுபடியை பொறுத்தமட்டில் மாவட்டம் முழுவதும் இதுவரை (டிசம்பர்-10) 76 ஆயிரத்து 500 ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி முடிந்துள்ளது. கிட்டத்தட்ட 18 ஆயிரம் ஹெக்டேரில் உழவுப் பணிகள் நடந்து வருகிறது. இதுபோன்று பயறுவகை பயிர்கள், சிறுதானியங்கள் எண்ணெய்வித்து பயிர்கள் மற்றும் கரும்பு சாகுபடியும் வழக்கத்தை விட இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.விவசாயிகளுக்கு தரமான விதைகள், இடுபொருட்கள் மற்றும் உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்க வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை வழங்கப்பட்டது போக 213 மெ.டன் நெல் விதைகள், 41 மெ.டன் பயறு வகை விதைகள், 47 மெ.டன் எண்ணெய்வித்து விதைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.இதுபோன்று டி.ஏ.பி., 1,573 மெ.டன், யூரியா 5,252 மெ.டன், பொட்டாஷ் 2,343 மெ.டன், காம்பளக்ஸ் 2,116 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலையில் வழங்கப்படுகிறது.தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சான்று பெற்ற தரமான நெல் விதைகள் மற்றும் பயறுவகை விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. நெல் நுண்சத்து, சிங்க் சல்பேட், வசம்புத்தூள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள், நெல் நடவு இயந்திரம், பவர் டில்லர், கைத்தெளிப்பான் போன்றவையும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.எனவே, விவசாயிகள் அனைவரும் வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் நடமாடும் உழவர் நண்பன் வாகனங்களை தொடர்புகொண்டு இவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

**சர்க்கரை ஆலை அரவை பணி இன்று துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,01:41 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 2010-2011ம் ஆண்டுக்கான அரவை பணி இன்று முதல் நடைபெறும்' என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 2010-2011ம் ஆண்டிற்கான அரவை பணி இன்று காலை 11 மணியளவில் துவங்குகிறது. இதன் துவக்க விழாவுக்கு மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலை மை வகித்து அரவை பணியை துவக்கி வைக்கிறார். விழாவில் கரும்பு விவசாயிகள், பங்குதாரர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் கலந்துகொள்கின்றனர்.

**வெங்காயம் விலை எகிறியது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,22:50 IST

வெள்ளகோவில்: வரத்து குறைந்துள்ளதால், வெள்ளகோவில் வாரச்சந்தையில் வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை வெள்ளகோவில் புது பஸ் ஸ்டாண்ட் அருகில் வாரச்சந்தை கூடுகிறது. வெளிமார்க்கெட்டை விட, குறைந்த விலையில் இங்கு விற்கப்படுவதால், வெள்ளகோவில் பகுதி மக்கள் இச்சந்தையில் பொருட்கள் வாங்க அதிக ஆர்வம் காட்டுகின்றனர். காய்கறி, கீரை வகை மட்டுமின்றி, சட்டை, பேன்ட், ஜமுக்காளம், சேலை, ஜாக்கெட் பிட், பலகாரம் என அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த மாதங்களில் பெய்த தொடர் மழையால், பெரிய வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. தொடர் மழையால், பெங்களூரு, தேனி மாவட்டங்களிலிருந்து வெங்காயம் வரத்து தடைபட்டுள்ளது. மழைக்கு முன்பு வரை, ரூ.15.17 என விற்கப்பட்ட வெங்காயம், நேற்று கிலோ 47 ரூபாய்க்கு விற்றது. தக்காளி 30; சின்ன வெங்காயம் 25 என விற்கப்பட்டது. வெளிமார்க்கெட்டில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.50 வரை விற்கப்படுகிறது.

**பி.ஏ.பி., கிளை வாய்க்கால்களை பராமரிக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 12,2010,22:36 IST

உடுமலை:பி.ஏ.பி., மூன்றாம் மண்டலத்தில் பாசன நிலங்களுக்கு போதுமான தண்ணீர் கிடைக்க கிளை வாய்க்கால்களை பராமரிக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். உடுமலை அருகே திருமூர்த்தி அணையிலிருந்து மூன்றாம் மண்டல பாசனத்திற்கு விரைவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. இதில், உடுமலை கிளை கால்வாய் மூலம் 14 ஆயிரத்து 284 ஏக்கரும், பூலாங்கிணறு கிளை வாய்க்காலில் 9 ஆயிரத்து 659 ஏக்கரும் பாசன வசதி பெறுகின்றன. பாசனத்திற்கு தண்ணீர் செல்லும் கிளை வாய்க்கால்கள் போதிய பராமரிப்பு இல்லாமல் உள்ளன. பூலாங்கிணறு கிளை வாய்க்கால் கான்கிரீட் பக்கவாட்டு சுவர்கள் பல இடங்களில் பெயர்ந்துள்ளது. பகிர்மான வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறக்கும் ஷட்டர்களும் போதிய பராமரிப்பு இல்லாமல் உள்ளது.இந்தாண்டு காண்டூர் கால்வாய் பராமரிப்பு பணிகளையொட்டி மூன்றாம் மண்டல பாசனம் முன்னதாகவே துவக்கப்பட்டு பாசன காலம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், பாசன பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளம், சூர்யகாந்தி உட்பட பிற பயிர்களுக்கு போதிய தண்ணீர்

கிடைக்குமா என்ற கேள்வி விவசாயிகளிடையே உள்ளது. விவசாயிகள் கூறுகையில், பூலாங்கிணறு கிளை வாய்க்கால் பல இடங்களில் மண் வாய்க்காலாக காணப்படுகிறது. இதனால், பாசனத்திற்கு வழங்கப்படும் தண்ணீர் பல இடங்களில் கரை வழியாக விரயமாகும் நிலை உள்ளது. கரை உடைப்பு உள்ள பகுதிகளில் தண்ணீர் திருட்டும் எளிதாக நடக்கும். பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள கிளை வாய்க்காலில் பராமரிப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். நீர் விரயம் மற்றும் ஷட்டர் ஆகிய இடங்களை பராமரித்து பாசன காலத்தில் முழுமையாக தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாய்க்காலில் முளைத்துள்ள முட்செடிகள் மற்றும் புதர்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *உற்பத்தி குறைந்ததால் வெங்காயம் விலை உயர்வு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*வட மாநிலங்களில், பருவம் தவறி பெய்த மழையால், வெங்காயம் உற்பத்தி குறைந்துள் ளது. இதனால் வெங்காயம் விலை அதிகரித்து வருகிறது.*
*நம் நாட்டில், மகாராஷ்டிரா, குஜராத், மத்தியபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வெங்காயம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. சென்ற நவம்பர் மாதத்தில், இம்மாநிலங்களில், பருவம் தவறி பெய்த மழையால் உற்பத்தி சரிந்துள்ளது. இதன் காரணமாக, சந்தைக்கு வரும் வெங்காயத்தின் அளவு குறைந்துள்ளது என உணவு மற்றும் வேளாண்மைத் துறைக்கான ராஜாங்க அமைச்சர் கே.வி.தாமஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.*
*உற்பத்தி குறைவு காரணமாக வெங்காயம் விலை உயர்ந்துள்ளதால், நல்ல லாபம் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். கடந்த 2008–09–ஆம் ஆண்டு வெங்காயம் உற்பத்தி 1.35 கோடி டன்னாக இருந்தது. இது, 2009–10–ஆம் ஆண்டில் 1.21 கோடி டன்னாக குறைந்துள்ளது.*

# நடப்பு பருவத்தில், பருத்தி உற்பத்தி மதிப்பீட்டை காட்டிலும் குறைய வாய்ப்பு

பருவம் தவறி பெய்த மழையால், நாட்டின் பருத்தி உற்பத்தி நடப்பு பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்) மதிப்பீட்டைக் காட்டிலும் சரிவடையும் என தெரிய வந்துள்ளது.

பருத்தி ஆலோசனை வாரியம், நடப்பு 2010-11-ஆம் பருவத்தில், 3.25 கோடி பொதிகள் (ஒரு பொதி 170 கிலோ) பருத்தி உற்பத்தியாகும் என மதிப்பீடு செய்து இருந்தது. இது, தற்போது சுமார் 3 கோடி பொதிகளாக மட்டுமே இருக்கும் என மறு மதிப்பீடு செய்துள்ளது. இந்த தகவலை, இந்திய ஜவுளித் தொழிலக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டி.கே. நாயர் தெரிவித்தார்.